மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, முகவை மாவட்டமும் பாண்டிநாட்டின் ஒரு அங்கம் ஆகையால் மதுரையிலே இருக்கிற சிறைச்சாலை முகவை மாவட்டத்திற்கும் பயன்படும்.

மலட்டாறு திட்டம்.

*வினா எண். 53—திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பருவமழை தவறியுள்ளதால் மலட்டாறு திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அணைக்கட்டு கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : தலைவரவர்களே, இப்போது அணைக்கட்டும் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆய்வு முடிந்து அறிக்கை எப்போது அரசுக்கு வரும்? எப்போது திட்டம் ஆரம்பிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இதில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அவருடைய கருத்து பெறப் பட்டு, அதன்படி திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : தலைவரவர்களே, இத் திட்டத்திற்குரிய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இருவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. இதை ஒரு நீர்த்தேக்கமாக கட்டுவது என்பது ஒன்று. மற்றொன்று இதை ஒரு அணையாக கட்டுவது என்பது. இந்த இரண்டு கருத்துக்களில் எதை ஏற்றுக் கொள்ள லாம் என்பதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இதில் ஒரு முடிவு எடுத்த பிறகுதான் மற்ற பணிகள் தொடங்கப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய தேவையையும் அவசரத்தையும் உணர்ந்து அரசு ஏற்கனவே இதை ஒரு நீர்த் தேக்கத் திட்டமாக எடுத்துக்

1982 பிப்ரவரி 5]

கொள்ள பரிசீலனை செய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. அவரிடத்திலிருந்து இன்னும் அறிக்கை வராத ஒரே காரணத்தால் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்ற பதில் வந்திருப்பதாகக் கருதுகிறேன். அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்பியாவது மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உடனடியாக அறிக்கை பெற்று, திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அவருடைய கருத்தைத் தான் எதிர் பார்க்கிறோம். அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும் இறுதி முடிவை அரசுதான் எடுக்கும். அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் தேவையைக் கருதி தகுந்த நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தை எதிர்பார்க்கிறோம் விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வைகை ஆற்றின் கால்வாய்களை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண். 54—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977ஆம் வருட கடைசியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வைகை சீரமைப்புக் கால்வாயும் அதைச் சார்ந்த கிளைக் கால்வாய்களும் கண்மாய்களும் உடைப்புகள் எடுத்தும் அதில் உள்ள பாலங்கள் சேதமடைந்தும் இதுவரை மராமத்து செய்யப்படாமல் உள்ளதா ?

(ஆ) இதனால் விவசாயத்திற்குத் தண்ணீர் வைகை அணையிலிருந்து விடமுடியாத நிலைமையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1977–79 ஆம் வருடத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் சேதம் அடைந்த வைகை ஆற்றின் கால்வாய்ப் பகுதிகளில் மீண்டும் வெள்ளக் காலங்களில் சேதம் ஏற்படாமல் தடுக்க, குறிப்பிட்ட இடங்களில் கால்வாய்களின் தடங்களை மாற்றியமைக்கவும் மற்றப் பகுதிகளை மேம்பாடு செய்யவும் ரூ. 313 இலட்சம் மதிப்பீட்டில், தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஒரு விரிவான செயற் குறிப்பினை அரசிற்கு அனுப்பியுள்ளார். இது